Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPORTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY
SELL
INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR
416.888.7877

33ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059 email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com www.tamilvanakkam.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221

நிதி: 33 பாலம்: 18 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | SEPTEMBER 15, 2023

# ஒரு பூமி, ஒரு குடும்பம், ஒரே எதிர்காலம்

வசுதைவ குடும்பகம் (Vasudhaiva Kutumbakam) என்ற சமஸ்கிருத வார்த்தையைக் கருப்பொருளாகக் கொண்டு, அதன் ஆங்கில மொழி பெயர்ப்பாக "ஒரு பூமி, ஒரு குடும்பம், ஒரே எதிர்காலம்" ("One Earth, One Family, One Future") என்ற தலைப்பில் 2023 செப்ரெம்பர் 09ஆம் திகதி G20 நாடுகளின் மாநாடு இந்தியாவில் டெல்லியில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையில் ஆரம்பமாகி செப்ரெம்பர் 10ஆம் திகதி நிறைவு பெற்றது.



Bharat Mandapam

இம்மாநாடு நடைபெறுவதற்கு IECC எனப்படும் உச்சி மாநாடுகள் மற்றும் சர்வதேச கண்காட்சிகள் நடைபெறும் மண்டபத் தொகுதியான புதுடெல்லியில் இருக்கும் பிரகதி மைதானம் (Pragati Maidan) தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது. இங்குள்ள பாரத் மண்டபத்தில் (Bharat Mandapam) G20 மாநாடு நடைபெற்றது. G20 மாநாடு நடைபெறும் முன்னர் இம்மண்டப முகப்பில் 27 அடி உயரமான 18தொன் நிறையுள்ள நடராசரின் வெண்கலச்சிலை ஒன்று நிறுவப்பட்டது. இந்த நடராசரின் சிலையைத் தமிழ்நாட்டின் சுவாமி மலையைச் சேர்ந்த புகழ்பெற்ற சிற்பியான ராதாகிருஷ்ணன் ஸ்தபதி, அவருடைய குழுவினருடன் சேர்ந்து ஏழு மாதங்களில் வடிவமைத்து நிறுவியிருந்தார்.

இச்சிலையைத் திறந்து வைத்தபோது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, "பாரத் மண்டபத்தில் உள்ள இந்த அற்புதமான நடராஜர் சிலை நமது வளமான வரலாறு மற்றும் கலாசாரத்தின் அம்சங்களை உயிரோட்டமாக்குகிறது. G20 மாநாட்டிற்கு உலகமே இங்கு திரண்டு வரும்போது இந்தியாவின் பழமையான கலைத்திறன் மற்றும் பாரம்பரியங்களுக்கு இது ஒரு சான்றாக அமையும்" என்றார்.

123 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இக்கட்டிடத் தொகுதியில் பல சர்வதேசக் கண்காட்சிக் கூடங்கள் மற்றும் பல மாநாட்டு மண்டபங்கள் உண்டு. வருடந்தோறும் 70இற்கு மேற்பட்ட சர்வதேசக் கண்காட்சிகள் இங்கு நடைபெறுகின்றன. வருடம்தோறும் 3 மில்லியனுக்கு மேற்பட்டவர்கள் இங்கு வருகின்றனர். இங்கு 3000இற்கு மேற்பட்டோர் அமர்ந்து பார்வையிடக்கூடிய அரங்கம் உள்ளது.

G20 மாநாட்டுக் காலப்பகுதியில் இந்த பாரத் மண்டபம் கலாசார நடைபாதை (Culture Corridor) என அழைக்கப்படும் படியாக G20 மாநாட்டில் கலந்து கொள்ளும் மற்றும் பார்வையாளர்களாக அழைக்கப்பட்ட 29 நாடுகளின் பல்வேறு பாரம்பரியங்களைக் காண்பிக்கும் பொருட்காட்சிகள் மற்றும் மெய்நிகர் (Virtual) காட்சிகள் அமைக்கப்பட்டிருந்தன.

சங்கு (Conch Shell) வடிவத்தில் அமைந்த பாரத் மண்டபத்தின் கட்டிடக் கலை இந்தியாவின் புராதன மரபுகளில் இருந்து கலையம்சத்தை எடுத்து நவீன வசதிகள் மற்றும் சமகால வாழ்க்கையைத் தழுவி வடிவமைக்கப்பட்டுள்ளது.

G20 நாடுகளில் 19 நாடுகளும் மற்றும் ஐரோப்பிய ஒன்றியமும் அங்கம் வகிக்கின்றன. ஆஜன்ரீனா, அவுஸ்ரேலியா, பிரேசில், கனடா, சீனா, பிரான்ஸ், ஜேர்மனி, இந்தியா, இந்தோனேசியா, இத்தாலி, ஜப்பான், மெக்சிகோ, தென் கொரியா, ரஷ்யா, சவூதி அரேபியா, தென் ஆபிரிக்கா, துருக்கி, ஐக்கிய இராச்சியம் மற்றும் அமெரிக்கா ஆகிய 19 நாடுகளுமே G20இல் அங்கம் வகிக்கும் நாடுகளாகும்.

இம்முறை G20 நாடுகளுக்கு இந்தியா தலைமை வகிக்கிறது. 2022இல் G20 நாடுகளின் மாநாடு இந்தோனேசியாவில் நடைபெற்றது. 2024இல் G20 நாடுகளின் மாநாடு பிரேசிலில் நடைபெற உள்ளது. G20 நாடுகளின் மாநாட்டை நடத்தும் நாடுகளின் தலைவருக்கு விருந்தினர் களாக சில நாடுகளை மாநாட்டிற்கு அழைக்க முடியும். அவர்கள் மாநாட்டில் பார்வையாளர்களாக மட்டுமே பங்கு பற்றுவர். இம்முறை இந்தியா விருந்தினர்

தொடர்ச்சி 05 பக்கம்

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah
416-889-1083
kannanhomes143@yahoo.com

www.ParaCity.ca
647-296-0596
TisiPara@gmail.com
Para Tisikulasingam
647 296 0596

Homelife GTA Realty
BUY/ SELL /LEASE
www.vanyhome.ca/
Life Insurance & Super Visa Insurance
www.vjsfinancial.ca
Vany Jeganmohan
REALTOR & INSURANCE ADVISOR
416-670-7436

FOR ALL YOUR REAL ESTATE NEEDS
GEORGE PARANTHAMAN
georgeparan1@gmail.com
416-277-9044
HomeLife GTA Realty Inc.
TRUTH BUILDS TRUST

FRANK ROSSO
REALTOR®
705-243-6023
info@frankrossorealtor.com
RE/MAX HALLMARK EASTERN REALTY
Expertise, Insight, Innovation: Redefining Real Estate
705-243-6023
AMANDA MCCASKIE
REALTOR®
CERTIFIED REAL ESTATE NEGOTIATION EXPERT
@AmandaMccaskieRealtor

BUYING / SELLING HOMES
BALA MANI MBA
Sales Representative
Contact : 647-290-1022 | 0605bala@gmail.com | visit : www.realtorbala.ca
* Lawyer Fee, Moving Cost, Staging all Free of Cost.
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S 0C2
* We help to find your best future home!

Welcoming new patients of all ages since 2000 at ...
Bridletowne Dental
Dr. Jeyapalan, BDS., DDS.
(University of Toronto) Dentist
416 492 3775
Bridletowne Dental
385 Silver Star Blvd, Suite 217 Scarborough, M1V 0E3
(Midland & McNicoll, MAXUM Building, In the RONA PLAZA)
www.bridletownedental.com

*Brand New Condo Project*

# THE GRAND

## AT UNIVERSAL CITY

*Starting Low $ 600K*



1 Bed Room to 3 Bed Room

- ⌘ Flexible deposit structure
- ⌘ #5000 Upon Signing
- ⌘ 2.5% Extended Deposit
- ⌘ Occupancy : November 2027
- ⌘ 1 Year Free maintenance fee.
- ⌘ 5 Appliances included
- ⌘ No Assignment Fee
- ⌘ Rental Possible during Occupancy
- ⌘ Development Charges capped.

**Please Call : Raja Mahendran 416-315-9397**

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc. Brokerage***

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2

**Tel: 416-321-6969** * Independently owned and operated.



Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL

MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ள கொக்குத்தொடுவாய்!




முல்லைத்தீவு மாவட்டம் - கொக்குத்தொடுவாயில் கண்டறியப்பட்ட மனிதப் புதைகுழியின் அகழ்வு நடவடிக்கை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த அகழ்வுப் பணிகள் கடந்த 6ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு, ஆறாவது நாளான கடந்த 12ஆம் திகதி மாலைவரை ஏழு மனித எச்சங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன் ஐந்து மனித எச்சங்கள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அகழ்வு நடவடிக்கை முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில், முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவ, தொல்லியல் ஆய்வாளர் பரமு புஸ்பரட்ணம், தடயவியல் பொலிஸார், கிராம சேவையாளர் ஆகியோரின் பங்கேற்புடன், தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரால் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்த அகழ்வுப் பணியில் உடலங்களை அடையாளப்படுத்துவதில் கடினத் தன்மை காணப்படுவதாகவும் ஒன்றன் மேல் ஒன்றாகப் பல உடல்கள் பின்னிப் பிணைந்து இருப்பதால் இந்தநிலை தோன்றியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், இந்த அகழ்வுப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன.

இன்னும் எத்தனை நாட்களுக்கு இந்த அகழ்வுப் பணிகள் தொடரும்? அகழ்வு முழுமையாக நடைபெறுமா? இன்னும் எத்தனை உடல்கள் வெளிவரும்? இந்த உடல்களை அடையாளம் காண்பது சாத்தியமா? இவையெல்லாம் இப்போது எழும் கேள்விகள்.

அகழ்வுப் பணிகள் நிறைவடைந்த பின்னர் இது குறித்த விசாரணைகள் சரியான திசையில் நடைபெற்று நியாயம் வெளிப்படுத்தப்படுமா? என்பதும் மற்றுமொரு கேள்வியாக அமைக்கின்றது. இதற்கிடையே, கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வின் போது சில தவறுகளை ஊடகங்கள் சுட்டிக்காட்டியதன் காரணமாக மனிதப் புதைகுழி அகழ்வு நடவடிக்கையில் ஊடகங்களுக்கு புதிய கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதாக ஊடகவியலாளர்கள் குறைகூறுகின்றனர். ஊடகவியலாளர்கள் அகழ்வுப் பணி காலை ஆரம்பிக்கும் போதும், மதிய உணவு நேரமும், அகழ்வு மாலை நிறைவடையும் போதுமே அருகில் சென்று காணொளி மற்றும் புகைப்படங்கள் எடுத்து செய்தி சேகரிக்க முடியும் எனவும், ஏனைய நேரங்களில் செய்தி சேகரிக்க அனுமதி இல்லை எனவும் முல்லைத்தீவு மாவட்ட சட்டவைத்திய அதிகாரி க.வாசுதேவ கட்டுப்பாடு விதித்துள்ளார் என்றும் ஊடகவியலாளர்கள் தெரிவித்திருந்தனர்.

குறித்த அகழ்வுப் பணி பற்றிய விபரங்கள் ஏற்கனவே ஊடகங்களுக்கு மறைக்கப் பட்டு வரும் நிலையில் திடீரென இவ்வாறு ஊடகங்களுக்கு போடப்பட்ட புதிய கட்டுப்பாடு குறித்த இடத்தில் கிடைக்கப் பெற்ற தகவல்களை மூடி மறைப்பதற்கான செயற்பாடாகவே இருக்கின்றது என ஊடகவியலாளர்கள் தெரிவித்தனர்.

தகவல்கள் சரியான முறையில் வெளிப் படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருக்க லாம். எனினும் இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஊடகவியலாளர்கள் பிரதான சாட்சியாளர்களாக இருப்பதுடன், அவர்கள் வெளிப்படுத்தும் தகவல்கள் முக்கியத்துவம் வாய்ந்தவையாக அமைகின்றன என்பதையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் கொள்ள வேண்டும். இன்று கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி சர்வதேசத்தின் கவனத்திற்கு உள்ளாகி வருகின்றது.

கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி தொடர்பான விடயத்தை அரசாங்கம் உரிய முறையில் கையாள வேண்டும் என கனடா வலியுறுத்தியுள்ளது. புதைகுழி தொடர்பான விசாரணைகள் நம்பத் தகுந்த வகையில் அமைய வேண்டும் என்றும் கனடா தெரிவித்துள்ளது.

இந்த மனிதப்புதைகுழி தொடர்பான முறையான விசாரணைகள் நடைபெற வேண்டுமானால் அதற்கு சர்வதேச அழுத்தம் இன்றியமையாதது. அதற்கான அழுத்தத்தை தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேற்கொள்ள வேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் கடந்த 11ஆம் திகதி ஆரம்பமாகியுள்ள நிலையில், கூட்டத் தொடருக்கு முன்னதாக கடந்த 10ஆம் திகதி பேரவையின் உறுப்பு நாடுகளுடனான சந்திப்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளிடம் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து விளக்கியுள்ளார். குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடர்ந்து நிகழும் நில அபகரிப்புக்கள் தொடர்பில் அவர் விளக்கிக் கூறியுள்ளார். அங்கு பிரிட்டனால் சுமார் 15 உறுப்பு



நாடுகளின் பங்கேற்புடன் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த சந்திப்பில் கலந்துகொண்ட சுமந்திரன், நாட்டின் தற்போதைய மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பிலும், குறிப்பாக பொறுப்புக்கூறல் செயன்முறைகளில் முன்னேற்றம் அடையப்படாமை, தேர்தல்களை நடத்துவதில் நிலவும் காலதாமதம், வட-கிழக்கு மாகாணங்களில் தொடரும் நில அபகரிப்பு, குருந்தூர்மலை மற்றும் தையிட்டி உள்ளடங்கலாக தமிழ்மக்கள் செறிந்துவாழும் பகுதிகளில் பௌத்த விகாரைகளை நிர்மாணிப்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள் என்பன உள்ளிட்ட அண்மைய காலங்களில் தமிழ் மக்கள் முகங்கொடுத்துவரும் பிரச்சினைகள் தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளிடம் விரிவாக எடுத்துரைத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, ஐ.நா மனித உரிமைகள் அலுவலகத்தின் ஆசிய பசுபிக் பிரிவின் தலைவர் ரோரி மங்கோவனுக்கும் சுமந்திரனுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்றும் நடைபெற்றது. இதன்போது இலங்கை தொடர்பான ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் அறிக்கை குறித்தும், இலங்கை விவகாரத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் சர்வதேச பிரதிநிதிகளிடம் அறிவுபூர்வமாகவும், அழுத்தமாகவும் விடயங்களை எடுத்துரைப்பது தமிழ் மக்களால் நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கு உள்ள பொறுப்பும் கடமையும் ஆகும்.

கோக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி விவகாரமும் சர்வதேசத்தின் கவனத்தைப் பெற்றுள்ள நிலையில் அது குறித்த நியாயமான விசாரணைக்கு சர்வதேசத்தின் பங்களிப்பைக் கோர சுமந்திரன் போன்ற தமிழ் மக்களின் பிரதிநிதிகள் முன்வர வேண்டும்.

விளம்பரம்
VLAMBARAM
33ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: யசோதா குமாரகுலசிங்கம்
பதிப்பு: Canyon Press Inc.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும். விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

## படித்ததில் பிடித்தது



நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே.
அனுப்புங்கள் Vlambaram@sympatio.ca
யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

### அமைதி



ஒளி தன்னைச் சுற்றியுள்ள
எல்லாவற்றையும் வெளிச்சப்படுத்துகிறது.
ஆளரவமற்ற பாதை என்றாலும்கூட
விளக்கொளி வீசிக்கொண்டுதான்
இருக்கிறது. அதுதான் அதன் இயல்பு.
யாராவது அந்தப் பாதையில் வந்தால்
அவர்களுக்கு அது ஒளி கொடுத்து வழி
காட்டுகிறது. உதவவேண்டும் என்ற
நோக்கத்தினால் அல்ல அது அதன்
இயல்பு. அந்த இயல்பை தனக்கென
உரிமை கொண்டாடினால் அதில்
அர்த்தமும் இல்லாமல் போகும். இந்த
வெளிச்சத்தில் எங்கே இருக்கிறது நம்
வீடு என்று அலைந்து திரிந்து ஆர்பரிப்பு
கொள்ள வேண்டாம். எங்கே விழிப்புணர்வு
இருக்கிறதோ அதுவே நம் வீடு.
அந்த விழிப்புணர்வு என்ற வீடு இருப்பது
நமக்குள் தான் நம்முடைய ஆழ் மனம்
இருண்ட குகையைப் போல் இருப்பதால்
ஆழ்ந்து பார்ப்பதற்கே பயமாக உள்ள
காரணத்தால் எட்டிப் பார்க்கக்கூட
அச்சப்படுகிறோம்.
அந்த இருண்ட குகைக்குள் தான்
இருக்கிறது விசாலமான வெட்டவெளி
யாருமற்ற உள்வானம் எல்லையற்ற
பாழ்வெளி முடிவற்றதாய், ஆரம்பமும்
அற்றதாய் இருக்கும் சுத்தவெளி என்னும்
சுத்த சைதன்யம்
அதுவே நம் இருப்பு
அதுவே நமது ஏகவெளி
அதுவே பூரணம்
அதுவே அதீதம்
அதுவே அமைதி
அதுவே முழுமை
இந்த முழுமைக்கு தேவை ஆர்பரிப்பு
இல்லாத மனம் அலைச்சுழல் குறைந்த
நிலை மனமும் இதுவே ஆழ்மனதில்
ஆழ்ந்திருப்போம் அமைதியையே என்றும்
அனுபவித்திருப்போம். - சிவகுமார்

# ஒரு பூமி...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

களாக பங்களாதேஷ், எகிப்து, நெதர்லாந்து, நைஜீரியா, ஓமான், சிங்கப்பூர், ஸ்பெயின், ஐக்கிய அரபு இராச்சியம், கொமொரோஸ் (comoross) மற்றும் மொரிஷியஸ் ஆகிய பத்து நாடுகளை அழைத்திருந்தது. அமெரிக்கா மற்றும் சில மேற்குலக நாடுகள் வலியுறுத்தியும் இந்தியா, உக்ரைன் நாட்டை விருந்தினராக அழைக்க மறுத்து விட்டது. கடந்த ஆண்டு இந்தோனேசியா G20 நாடுகளின் மாநாட்டிற்கு உக்ரைனை விருந்தினர் நாடாக அழைத்திருந்தது.




இம்முறை இந்தியாவில் நடைபெற்ற G20 நாடுகளின் மாநாட்டில் சீன அதிபரோ அல்லது ரஷ்ய அதிபரோ கலந்து கொள்ளவில்லை. அவர்களின் பிரதிநிதிகளாக சீன அரசு சீனாவின் பிரதமரான Li Qiang ஐயும் ரஷ்ய அரசு, ரஷ்யாவின் வெளிவிவகார அமைச்சரான Sergey Lavrovஐயும் அனுப்பியிருந்தன. ஏனைய 17 நாடுகளில் இருந்து அவர்களின் தலைவர்கள் இம்மாநாட்டில் பங்குபற்றியிருந்தனர்.

இம்முறை இந்தியாவில் நடைபெற்ற G20 நாடுகளின் மாநாட்டின் இறுதியில் எல்லா நாடுகளின் ஏகோபித்த சம்மதத்துடன் ஒரு மாநாட்டுப் பிரகடனம் வெளியிடப்பட மாட்டாது என்றே பல்நாட்டு ஊடகங்களும் செய்தி வெளியிட்டிருந்தன. அவர்கள் தற்போது நடைபெறும் ரஷ்ய-உக்ரைன் போரை மேற்கோள் காட்டி இப்போர் தொடர்பாக ஒன்றுக்கு ஒன்று எதிரான கொள்கைகளையுடைய நாடுகள் பங்குபற்றும் இம்மாநாட்டில் ஏகோபித்த சம்மதத்துடன் ஒரு பிரகடனம் வெளியிடுவது சாத்தியமற்றது எனக் கூறியிருந்தனர். ஆனால், இந்த ஊடகவியலாளர்களின் எதிர்வு கூறலை முறியடித்து உலக நாடுகளை ஆச்சரியத்தில் வியக்கும் வண்ணம் இந்தியப் பிரதமர் G20 நாடுகள் எல்லாவற்றின் ஒப்புதல் உடன் G20 மாநாட்டுப் பிரகடனத்தை செப்ரெம்பர் 9ஆம் திகதி மாலையே வெளியிட்டார்.

இந்தப் பிரகடனத்தில் 83 விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. புதுடெல்லியில் G20 நாடுகளின் தலைவர்களின் கையெழுத்துடன் இந்த மாநாட்டுப் பிரகடனத்தை வெளியிட இந்திய அரசின் வெளிநாட்டுச் சேவையைச் சேர்ந்த நான்கு இராஜதந்திரிகள் (Diplomats) பல மாதங்களாக G20இல் இருக்கும் உறுப்பு நாடுகளுடன் முன்னும் பின்னுமாக கடின முயற்சிகள் மேற்கொண்டே இப்பிரகடனத்தை தயாரித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பிரகடனத்தில் ரஷ்ய "ஆக்கிரமிப்பை" பற்றிக் கூறவோ அல்லது உக்ரைனில் நடைபெறும் போருக்காக ரஷ்யாவைக் 'கண்டிக்கவும்' இல்லை. அதற்குப் பதிலாக இப்பிரகடனத்தில் பிறேசில், தென் ஆபிரிக்கா மற்றும் இந்தோனேசியாவின் உதவியுடன் இந்தியா, ரஷ்யா மற்றும் உக்ரைனுடன் தற்போது நடத்தும் பேச்சுவார்த்தைகளைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறது.

அத்துடன், "பூவுலகின் அமைதி மற்றும் செழுமைக்காக" என்ற தலைப்பின் கீழ், "உலகம் முழுவதிலும் உள்ள போர்கள் மற்றும் மோதல்களினால் ஏற்படும் மனித துன்பங்கள் மற்றும் பாதகமான விளைவுகளை நாங்கள் ஆழ்ந்த கவலையுடன் அவதானிக்கிறோம்" எனவும், கடந்தமுறை இந்தோனேசிய மாநாட்டில் குறிப்பிடப்பட்டது போல், "இன்றைய யுகம் போர்கள் நடைபெறுவதற்கான காலப்பகுதியாக இருக்கக் கூடாது" எனவும் குறிப்பிடப் பட்டிருந்தன. அத்துடன் மேலதிகமாக, "உக்ரைனில் நடைபெறும் போரைப்பற்றி இந்தோனேசியா G20 மாநாட்டில் கூறிய மாதிரி ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை மற்றும் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்மானங்களை கடைப்பிடிக்க வேண்டும் என மீண்டும் வலியுறுத்துகிறோம். அனைத்து நாடுகளும் ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கம் மற்றும் கோட்பாடுகளுக்கு முழுமையாக ஒத்துப்போகும் வகையில் செயல்பட வேண்டும் என வலியுறுத்துகிறோம். ஐக்கிய நாடுகளின் சாசனத்திற்கு அமைய எந்த ஒரு நாடும், இன்னொரு நாட்டின் இறையாண்மை அல்லது அரசியல் சுதந்திரத்திற்கு எதிராக பிராந்தியத்தை கையகப்படுத்துதலைத் தவிர்க்க வேண்டும் எனக் கோருகிறோம்" எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. இவ்வாறு G20 மாநாட்டில் வெளியிடப்பட்ட பிரகடனத்தில் குறிப்பிட்டிருந்தபடியால் அதை G20 மாநாட்டில் கலந்து கொண்ட அனைத்து நாடுகளாலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது.



Prime Minister Justin Trudeau with Indian Prime Minister Narendra Modi

இம்முறை நடைபெற்ற G20 நாடுகளின் மாநாட்டில் நடைபெற்ற மிகக் குறிப்பிடத்தக்க விடயமாக கருதுவது 55 நாடுகளை உறுப்பினராகக் கொண்ட ஆபிரிக்க ஒன்றியத்தை (African Union) G20 நாடுகளின் உறுப்பினராக அங்கீகரித்தது ஆகும். இதன்மூலம் ஐரோப்பிய ஒன்றியம்போல் ஆபிரிக்க ஒன்றியமும் G20 நாடுகளின் உறுப்பினராக இருக்கும். இதுவரை ஆபிரிக்க ஒன்றியத்தில் உறுப்பினராக இருந்த தென் ஆபிரிக்கா மட்டுமே G20 நாடுகளில் ஒன்றாக இருந்தது.

இம்மாநாட்டில் அமெரிக்கா, சவூதி அரேபியா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் சேர்ந்து ஒரு தொடருந்து மற்றும் கப்பல் போக்குவரத்துப்பாதையை உருவாக்க ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டனர்.

காலநிலை மாற்றம் தொடர்பாகவும் G20 நாடுகளின் தலைவர்கள் உலகளாவிய புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறனை (renewable energy) 2030ஆம் ஆண்டளவில் மூன்று மடங்காக அதிகரிக்க ஒப்புக் கொண்டுள்ளனர். அத்துடன் நிலக்கரி மூலம் பெறப்படும் எரிசக்தியை படிப்படியாகக் குறைக்க வேண்டியதன் அவசியத்தையும் ஒப்புக்கொண்டுள்ளனர். ஆனால், இது தொடர்பாக எந்த ஒரு கால இலக்குகளை நிர்ணயிக்கவில்லை.

ஊடகவியலாளர்களுடனான கலந்துரையாடலில் கனடியப் பிரதமர், "G20 நாடுகள் மிகவும் வேறுபட்ட கொள்கைகளை உடைய குழு. அதனாலேயே இவ்வாறான ஒரு பிரகடனம் எல்லோருடைய சம்மதத்துடனும் வெளியிடப்பட்டது. ஆனால், உக்ரைனுடைய வெற்றிக்கு எவ்வளவு காலம் தேவையோ அவ்வளவு காலமும் கனடா தொடர்ந்து ஆதரவு வழங்கும். உக்ரைன் மீதான ரஷ்யாவினுடைய கொடூரமான படையெடுப்பு குற்றமானதும் ஏற்றுக்கொள்ள முடியாததும் ஆகும். இப்படையெடுப்பு பல ஆயிரக்கணக்கான மக்களைக் கொன்றது மட்டுமல்லாமல், உலகம் முழுவதும் சக்திவள ஆற்றல் மற்றும் உணவுப் பாதுகாப்பின்மையை உருவாக்குகிறது" என்றார்.

கனடியப் பிரதமருடனான சந்திப்பில், இந்தியப் பிரதமர் கனடாவில் தீவிரவாத சக்திகளின் இந்திய எதிர்ப்பு நடவடிக்கைகள் தொடர்வது குறித்து இந்திய அரசின் வலுவான கவலையைத் தெரிவித்தார். அவர்கள் பிரிவினை வாதத்தை ஊக்குவித்து இந்தியத் தூதருக்கு எதிராக வன்முறையைத் தூண்டுகிறார்கள். தூதரக வளாகங்களை சேதப்படுத்துகிறார்கள். கனடாவில் உள்ள இந்திய சமூகத்தையும் அவர்களின் வழிபாட்டுத் தலங்களையும் அச்சுறுத்துகிறார்கள் என்றும் கூறினார்.

அதற்குப் பதிலளித்த கடினயப் பிரதமர், "கனடா எப்போதும் கருத்துச் சுதந்திரம் மற்றும் அமைதியான எதிர்ப்புச் சுதந்திரம் ஆகியவற்றைப் பாதுகாக்கும். அது எங்களுக்கு மிகவும் முக்கியமானது. அதே நேரத்தில் வன்முறையைத் தடுப்பதற்கும், வெறுப்புப் பிரசாரங்களை




Launch of the Global Biofuels Alliance at the G20.
Thanks: Evelyn Hockstein, AP

தடுப்பதற்கும் நாங்கள் ஆதரவாகவும் எப்போதும் இருக்கிறோம். சமூகப் பிரச்சனையில் ஒரு சிலரின் நடவடிக்கைகள் முழு சமூகத்தையும் அல்லது கனடாவைப் பிரதிநித்துவப்படுத்துவதாக எடுத்துக் கொள்ளக் கூடாது என நான் கருதுகிறேன்" என்றார்.

இந்தியப் பிரதமரால் G20 நாடுகளின் மாநாட்டில் பங்குபற்றியவர்களுக்கு செப்ரெம்பர் 09ஆம் திகதி அளிக்கப்பட்ட இரவுவிருந்து வைபவத்தில் கனடியப் பிரதமர் கலந்து கொள்ளவில்லை. கனடியப் பிரதமர் G20 நாடுகளின் தலைவர்கள் மாநாட்டிற்குக் கலந்து கொள்வதற்கு அவரது 16 வயது மகனுடனும் மற்றும் அரச குழுவினர், ஊடகவியலாளர்களுடனும் சென்றார். அவர்கள் சென்ற விமானம் இயந்திரக் கோளாறு காரணமாகத் திரும்பிப் புறப்பட முடியாமல் இந்தியாவில் நின்றது. அவர்களைத் திரும்பக் கூட்டிவர கனடாவில் இருந்து இன்னொரு விமானம் அனுப்பப்பட்டது.

நமது எண்ணங்கள் மிகவும் வலிமையானவை. அவற்றை பூக்களைப் போல தூவினால் அது நமக்கு மாலையாகக் கிடைக்கும். கற்களைப் போல எறிந்தால் அது நமக்கும் காயங்களாகக் கிடைக்கும்



# நாமும் நமது இல்லமும் 639

## பணவீக்கம் 2%



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

கனடிய மத்திய வங்கியின் ஆளுநர் ரிம் மக்கெலம் (Tim Mcalem) மத்திய வங்கியின் குறிக்கோள் பணவீக்கம் 2% என்பது கண்ணிற்கு எட்டிய தூரத்தில் இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

செப்ரெம்படர் 06, 2023 இல் கூடிய மத்திய வங்கிக்குழு, வட்டி வீதத்தில் எதுவித மாற்றத்தையும் செய்யாமல், 5% என்ற கனடிய மத்திய வங்கி வட்டி வீதத்திலேயே விட்டுள்ளது.

மத்திய வங்கி கடந்த பதினெட்டு (18) மாதங்களில் பத்து (10) தடவை வட்டி வீதத்தை அதிகரித்துள்ளது. 2022இன் ஆரம்பத்தில் 0.25% ஆக இருந்த வங்கியின் வட்டிவீதம் செப்ரெம்பர் 23இல் 5%ஆக அதிகரித்துள்ளது. இதனால் ஆதனம் வாங்குவோர், வியாபாரம் செய்வோர் கடன் பெறுமதியின் கொடுப்பனவு அதிகளவு அதிகரித்துள்ளது. இதனால் மாதாந்தக் கொடுப்பனவுகள் செய்வதில் பெரிய நெருக்கடி ஏற்படுகின்றது. இதனால் ஆதனவிலை அதிகரிப்பு தடைப்படுத்தப்பட்டுள்ளது.

### இறங்குமுகம் ஏற்படுமா ஆதன வியாபாரத்தில்?

இரண்டாவது காலாண்டு, அறிக்கையில் பொருளாதார சுருக்கம் (Economy Contracted) ஏற்பட்டுள்ளது. நிர்மாண தொழில்முறையின் வியாபாரம் இறங்கியுள்ளது. அத்துடன் தொடர்ச்சியான கடினய காட்டுத்தீயும் (Forest Fire) பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

அதிக வட்டிவீதம், மக்களின் செலவில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. எனினும் எதிர்கால பொருளாதார தகவல்களிற்கேற்ப மேலும் வட்டிவீத அதிகரிப்பும் ஏற்படலாம் என ஆளுநர் தெரிவித்துள்ளார்.

பணவீக்கம் இறங்கி வருகின்ற போதிலும் 2024இல் பணவீக்கம் 3% என்ற அளவிலும் 2025இல் இதன் பெறுமதி, கனடிய குறிக்கோள் பெறுமதியான 2%ஐ எய்தலாம் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அடுத்த மத்திய வங்கியின் வட்டிவீத அறிவிப்புத் திகதியாகிய ஒக்ரோபர் 26, 2023இல் வங்கி ஆளுநர் தனது எதிர்வு கூறலை தெரிவிப்பார் எனத் தெரிய வருகின்றது.

அளவுக்கு அதிகமான வட்டி அதிகரிப்பு பொருளாதாரத்தில் பெரிய இடைவெளியை ஏற்படுத்தி விடும் என்பதிலும் ஆளுநர்



கவனமாக இருப்பதாகவும் தெரிய வருகின்றது. எனினும், யூலை 2023இன் CPI (Consumer Price Index)இன் பெறுமதியில் 30% அடமானக்கடனைக் காட்டுகின்றது. இதனால் பணவீக்கத்தின் பெறுமதி குறையாமல் உள்ள என்பதும் தெரிய வருகின்றது.

பொதுவான ஆய்வாளர்கள், பணவீக்கத்தைக் கணக்கிடும்போது மாதாந்த அடமானக்கடன் நீக்கியே கணக்கிடப்படல் வேண்டுமெனத் தெரிவிக்கின்றனர்.

அநேகமான கனடிய மாகாண நிதி அமைச்சர்கள் கனடிய மத்திய வங்கியின் ஆளுநரிற்கு வட்டிவீதத்தை அதிகரிக்காமல் வைத்திருக்குமாறு செப்ரெம்பர் 06, 2023இற்கு முன்பாகக் கேட்டிருந்தனர். வட்டி அதிகரிப்பு இல்லாதது சிறந்த செயல் எனவும் தெரிவிக்கின்றார்கள். எனினும், மத்திய வங்கி, தனது செயல்பாட்டில் எதுவித அரசியல் தாக்கங்களும் கிடையாது எனவும் தெரிய வருகின்றது.

இன்றைய உலகப் பொருளாதாரத்திலும், தொழிலிலும் இந்தியர்களின் பங்கு பெரிய பங்கு வகிக்கின்றது.

1980களின் இறுதிபகுதிகளிலும் 1990களின் பெரும்பகுதிகளிலும் இலங்கைத் தமிழர் மிகப்பெரியளவில் உள்ளூர் அரசியல் நிலைப்பாட்டால் வெளியேற வேண்டியிருந்தது. அண்மைக்காலங்களில், இந்த நிலைப்பாட்டை, அதாவது இந்தியர்களின் புலப்பெயர்வு இலங்கைத் தமிழரின் புலம்பெயர்வுடன் ஒப்பிடக்கூடியதாக உள்ளது. அத்துடன் ஆபிரிக்க நாட்டிலிருந்தும் மக்கள் இடம்பெயர்ந்து வருவதனைக் காணக்கூடியதாக உள்ளது. இவர்களில் பெரும்பகுதியினர், குறிப்பாக இந்தியர்களின் புலம்பெயர்வு எதிர்காலத்தில் வெளிநாட்டுப்

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)




Condo for Sale

- Tridel Unit
  1 Bedroom + Den Condo for Sale
- Kennedy & Fluy 401
  Den Can be used as Bedroom 24 hours Security
- Easy Access to Mall, Universities, Colleges, Highway etc...
- Available anytime.

For more info. Please Call....
George Paranthaman
416.277.9044



HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S 0C2
Tel: 416-321-6969 * Independently owned and operated.

# சனல்-4 வெளிப்படுத்திய குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையே பொருத்தமானது!

- விகிர்தன் -

பிரித்தானியாவின் சனல்-4 ஊடகத்தின் ஆவணத் தொகுப்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ள, உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதலின் பின்னணியில் இருந்ததாகக் கூறப்படுகின்ற பாரிய சூழ்ச்சி மற்றும் அதில் குறிப்பிடப்படுகின்ற நபர்கள் தொடர்பிலான தகவல்கள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. இது இலங்கை அரசியலில் பலரது நிலையை கேள்விக்குறியாக்கியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவின் அரசியல் எதிர்காலத்தை இந்த ஆவணப்படம் மிகுந்த சிக்கலுக்கு உள்ளாக்கியுள்ளது. அரச புலனாய்வு பிரிவின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுரேஸ் சாலே, மற்றும் தற்போது இராஜாங்க அமைச்சராகவுள்ள பிள்ளையான் எனப்படும் சிவனேசதுரை சந்திரகாந்தன் ஆகியோருக்கும் பாரிய பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது.

இப்போது, மஹிந்த ராஜபக்ஸ தரப்பினர் சனல்-4 ஊடகத்தின் மீது கடுமையாக விமர்சனத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக சனல்-4 தொலைக்காட்சி வெளியிட்ட காணொளி குறித்து முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ கருத்து வெளியிட்டுள்ளார்.

குறித்த காணொளியானது 2005ஆம் ஆண்டிலிருந்து ராஜபக்ஸவின் பாரம்பரியத்தை கருமையாக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படும் ராஜபக்ஸவிற்கு எதிரான பிரசாரம் என்று அவர் கூறியுள்ளார். இதே தொலைக்காட்சி வெளியிட்ட முந்தைய காணொளிகளைப் போலவே இதுவும் பொய்களால் நிரப்பப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் நோக்கத்திற்காக உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் பயன்படுத்திக் கொள்ளப்படும்வரை குண்டுத் தாக்குதலின் உண்மையான சூத்திரதாரியை கண்டுபிடிக்க முடியாது எனவும், பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நீதியும் கிடைக்காது என்றும் மஹிந்தவின் புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

2019ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஸவை வெற்றிபெற வைப்பதற்காகவே குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது என்ற தவறானதொரு நிலைப்பாட்டை தோற்றுவிக்க ஒரு தரப்பினர் முயற்சிக்கிறார்கள். குண்டுத் தாக்குதலை பொதுஜன பெரமுன தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டது என்று கூறப்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஏனெனில், 2019ஆம் ஆண்டிற்கு முன்னர் 2018ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் பொதுஜன பெரமுன அமோக வெற்றி பெற்றது. எனவே, நாங்கள் கொள்கை அடிப்படையில் செயற்படுகின்றோமே தவிர சந்தர்ப்பவாத அரசியல் செய்யவில்லை. இக்குண்டுத் தாக்குல் சம்பவம் மற்றும் விசாரணைகள் தற்போது தேர்தல் பிரசாரத்திற்காக பயன்படுத்திக் கொள்ளப்




படுகிறது என்று அவர் கூறுகின்றார். இவ்வாறு, மஹிந்த தரப்பினர் தங்கள் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான சனல்-4 ஆவணப் படத்திற்கு எதிராகவும், அந்தத் தொலைக்காட்சிக்கு எதிராகவும் உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி கொழும்பிலுள்ள பிரிட்டன் உயர்ஸ்தானிகராலயத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டது.

மஹிந்த தரப்பினருக்கு ஆதரவான தேசம் மற்றும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கான தேசிய இயக்கத்தால் இந்த ஆர்ப்பாட்டம் கடந்த 7ஆம் திகதி முன்னெடுக்கப்பட்டது. ஆர்ப்பாட்டக்காரர்களால் பிரிட்டன் உயர்ஸ்தானிகராலயத்தில் கடிதம் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

சனல்-4 ஆவணப்படம் இலங்கைப் புலனாய்வுப் பிரிவை இலக்கு வைத்து போலியான தகவல்களை வெளியிட்டுள்ளது என்றும், இந்தக் காணொளியில் தெரிவிக்கப்பட்ட தகவல்கள் போலியானவை என்றும் போராட்டம் நடத்தியவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், போலித் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ஒரு சுயாதீன நாட்டின் புலனாய்வுப் பிரிவினர் மீது சுமத்தப்பட்டுள்ள அடிப்படையற்ற குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு பிரிட்டன் அரசையும் வலியுறுத்துவதாவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான கோரிக்கைகளை உள்ளடக்கிய கடிதத்தையே பிரிட்டன் உயர்ஸ்தானிகராலயத்தில் கையளித்துள்ளதாக போராட்டம் நடத்தியவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு தொடர்பில் சனல்-4 காணொளி ஊடாக பொய்யான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், இதனை இலங்கை அரசாங்கத்தின் சார்பில் கடுமையாக நிராகரிப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

எந்தவொரு நபரும் அல்லது நிறுவனமும் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தும் உரிமையை பாதுகாப்பு அமைச்சகம் மதிக்கிறது என்றும், எவ்வாறாயினும், சனல்-4 வழங்கிய ஆதாரமற்ற, தீங்கிழைக்கும் மற்றும் பலவீனமாக நிரூபிக்கப்பட்ட கூற்றுகளிலிருந்து எழும் திட்டமிடப்படாத செயல்கள் அல்லது விளைவுகளுக்கு சனல் 4 பொறுப்பேற்க வேண்டும் என்றும் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, முன்னாள் இராணுவத் தளபதியும் தற்போதைய எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் பொன்சேகா தெரிவித்துள்ள கருத்தையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

புலனாய்வு பிரிவின் பிரதானி சுரேஸ் சாலே ராஜபக்ஸர்களின் பாதுகாவலன். அத்துடன் ராஜபக்ஸர்களின் வீட்டில் மலசலக்கூடம் சுத்தப்படுத்துபவர் என்றும் சனல் 4 வெளியிட்டுள்ள காணொளியை சாதாரணமாக ஒதுக்கிவிட முடியாது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அது குறித்து விசேட கவனம் செலுத்தி சர்வதேச விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தத்தியுள்ளார்.

புலனாய்வுப் பிரிவின் பிரதானியான சுரேஸ் சாலே தொடர்பில் சனல்-4 காணொளியில் பல விடயங்கள் கூறப்பட்டுள்ளன. 2010ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் காலத்தின்போது புலனாய்வுப் பிரிவில் இருந்து பொனிபஸ் பெரேரா என்பவருடன் ஒன்றிணைந்து தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டார். 2019ஆம் ஆண்டுக்கு பின்னர் சுரேஸ் சாலே புலனாய்வு பிரிவில் அதிகாரம் படைத்தவராக்கப்பட்டார்.

சனல்-4 வெளியிட்டுள்ள காணொளி தொடர்பில் நாடாளுமன்ற தெரிவுக்குழு ஊடாக விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாக அரசாங்கம் கூறுகின்றது.

தெரிவுக்குழுக்கள் எவ்வாறு செயற்படும் என்பதை நாம் அறிவோம். ஆகவே சனல்-4 வெளியிட்ட விடயங்களை நாடாளுமன்ற தெரிவுகுழு ஊடாக விசாரணை செய்வது பயனற்றது. சர்வதேச விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

சனல்-4 ஊடகம் வெளியிட்ட தகவல்கள் தொடர்பில் அரசாங்கம் விசாரணைகளை மேற்கொள்ளும் என்றும், தேவை ஏற்பட்டால் சரவதேச விசாணைகளும் நடத்தப்படும் என்றும் அமைச்சர் மனுஷ் நாணயக்கார நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

சனல்-4 வெளியிட்டுள்ள ஆவணத் தொகுப்பில் வெளியாகியுள்ள, உயிர்த்த ஞாயிறு தின குண்டுத்தாக்குதலின் பின்னணியில் இருந்ததாகக் கூறப்படுகின்ற சகல விடயங்களும் சுயாதீன சர்வதேச விசாரணை குழு ஒன்றின் மூலமாக நடத்தப்பட வேண்டும் என கொழும்பு மறை மாவட்ட பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை வலியுறுத்தியுள்ளார்.

தற்போது வெளியாகியுள்ள சனல்-4 செய்திச் சேவை ஆவணத் தொகுப்பில் வெளியாகியுள்ள விடயங்கள் தொடர்பில் இந்நாட்டு மக்கள் அனைவரும் தங்களது கவனத்தை செலுத்துமாறும் பேராயர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, சனல்-4 ஊடகம் வெளியிட்டுள்ள தகவல்கள் பாரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ள நிலையில் நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதுபற்றி பெரியதாக அலட்டிக்கொள்ளவில்லை. ஏனெனில் இந்த நிலைமைகள் அவரது அரசியலுக்கு சாதகமாகவே அமைந்துள்ளது என்பதுதான் உண்மை.

ஆயினும், சனல்-4 தொலைக்காட்சி அண்மையில் ஒளிபரப்பிய இந்த ஆவண நிகழ்ச்சியின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் மற்றும் பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதியரசர் தலைமையில் குழுவொன்றை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நியமிக்கவுள்ளார்.

எதிர்வரும் தேர்தல்களில் மீண்டும் எழுச்சி பெற முயலும் மஹிந்த ராஜபக்ஸ தரப்பினருக்கு குறிப்பிடத்தக்க சறுக்கலை சனல்-4 ஊடகம் ஏற்படுத்தியுள்ள அதே வேளையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அடுத்த கட்ட நகர்விற்கு பெரும் உந்துதலை ஏற்படுத்தியுள்ளது என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

எவ்வாறாயினும், உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களின் உள் நோக்கத்தையும் அத்தாக்குதலின் சூத்திரதாரியையும் கண்டறிய சர்வதேச விசாணைகளை மேற்கொள்வதே சரியான வழிமுறையாகும்.

# நானிலம் போற்றும் நட்பு - 29




"கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையும் உலகு." (அதிகாரம் பழமை, குறள் 809) என்ற குறளிற்கு "உரிமை கெடாமல் தொன்று தொட்டு வந்த உறவு உடையவரின் தொடர்பைக் கைவிடாதவரை உலகம் விரும்பிப் போற்றும்." என்று உரையாசிரியர் மு.வரதராசனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

"வழிவழியாகத் தொடர்ந்து வந்த நட்பு உடையவரின் நட்பினை, விட்டுவிடாதவரை உலகம் விரும்பும்" என்று உரையாசிரியர் அருள்திரு திருக்குறள் மாமுனிவர் முனைவர் கு.மோகனராசு அவர்கள் உரை தந்துள்ளார்.

"பழைய நட்பைக் கைவிடாதவரை உலகம் விரும்பும்" என்று உரையாசிரியர் சாமி சிதம்பரனார் அவர்கள் உரை தந்துள்ளார்."

நட்பை விட்டுவிடக் கூடாது. அவ்வாறு நடந்தால் உலகம் விரும்பும் என்று இந்தக் குறளில் அறிவுரை கூறப்பட்டுள்ளது.

நட்பின் பெருமை பற்றி குறுந்தொகையில் வரும் பாடல் ஒன்றினைக் கடந்த இதழில் உரையாடினோம்.

குறுந்தொகையில் வரும் நான்காவது பாடலைக் கவனிப்போம்.
"நோம்என் நெஞ்சே, நோம்என் நெஞ்சே,
இமைதீய்ப்பு அன்ன கண்ணீர் தாங்கி
அமைதற்கு அமைந்தநம் காதலர்.
அமைவிலர் ஆகுதல் நோம்என் நெஞ்சே"
இப்பாட்டின் ஆசிரியர் காமஞ்சேர் குளத்தார். தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவியின் துக்கத்தை எடுத்துக் காட்டுவது இந்தப் பாடல். இந்தப் பாடல் நெய்தல் திணையைச் சேர்ந்தது.

தலைவன் பிரிந்து போய் விட்டான். தலைவி அவனுடைய வருகையை எதிர்பார்த்துத் தனது துயரத்தை அடக்கிப் பார்க்கின்றாள். அது அடங்கவில்லை. கண்ணீர் ஓடியது. இவள் நிலையைக் கண்டு தோழி கவலைப்பட்டாள்.

தோழி தன்னிடம் இரக்கம் காட்டுவதைக் கண்ட தலைவி தன் உள்ளத்துயரை அவளிடம் உரைத்தாள். அன்பும் இரக்கமும் காட்டுகின்றவரிடம் தன் துயரத்தை வெளியிடும் தன்மை அனைவர்க்கும் உண்டு. இது இயற்கையின்படியே தலைவி தனது துன்பத்தைத் தோழியிடம் கூறினாள். உள்ளத்து துயரைக் கூறி ஆறுதல் பெறும் உறவாக நட்பு விளங்குகிறது என்பதை இந்தப் பாடல் எடுத்துக் காட்டுகிறது.

இந்தப் பாடலுக்கான பொருளைக் கவனிப்போம்.

"எனது நெஞ்சம் வருந்துகின்றது! எனது காதலர் பிரிவை எண்ணியெண்ணி எனது நெஞ்சம் வருந்துகின்றது. என் நெஞ்சத்திலே துக்கம் எழுவதற்கே அவர் இடம் கொடுக்க மாட்டார். இமையைத் தீய்ப்பது போன்ற வெப்பமுள்ள கண்ணீரை என் கண்ணிலே கண்டுவிட்டால் போதும். ஒரு நொடிப் பொழுதுகூடப் பொறுக்க மாட்டார். என் கண்ணீரைத் துடைத்து மகிழ்ச்சியூட்டுவார். அளவளாவிக் கலந்து உரையாடி நெஞ்சில் தோன்றிய கவலையைப் போக்குவார். இத்தகைய அன்புள்ள காதலர் இன்று என் அண்டையில் இல்லை. என்னிடம் அன்பில்லாதவர் போலப் பிரிந்து சென்றார். அவருடைய பழைய அன்பையும் இன்றைய அன்பின்மையையும் நினைத்து நினைத்து என் உள்ளம் வருந்துகின்றது. அவர் வந்தால்தான் என் வருத்தம் தணியும் என் செய்வேன்?" என்றவாறு தனது உள்ளத்துயரை தோழியிடம் கூறுகிறாள் தலைவி.
குறுந்தொகையில் வரும் ஐந்தாவது பாடலைக் கவனிப்போம்.

"அதுகொல் தோழி காம நோயே!
வதிகுருகு உறங்கும் இன்நிழல் புன்னை
உடைதிரைத் திவலை அரும்பும் தீநீர்
மெல்லம் புலம்பன் பிரிந்தெனப்
பல்இதழ் உண்கண் பாடு ஒல்லாவே"

நரிவெரூஉத்தலையார் பாடியது. தலைவனைப் பிரிந்துறையும் தலைவியின் துன்பத்தைப் பிரிவாற்றாமையைக் கூறுவது. நெய்தல் திணை.

பிரிவாற்றாமையால் தலைவி வருந்துகின்றாள். அவள் உள்ளக் கவலையால் உறக்கமின்றி வருந்துகின்றாள். இந் நிலையைக்கண்டு அவள் தோழியும் அவளிடம் இரக்கம் காட்டுகின்றாள். தோழியின் இரக்கத்தைக் கண்ட தலைவி, அவளிடம் காதலால் தனக்கு நேர்ந்த துயரத்தைத் தெரிவிக்கின்றாள்.

இந்தப் பாடலுக்கான பொருளைக் கவனிப்போம்.

'தோழியே! காமநோயின் தன்மை முழுவதையும் இது வரையிலும் நான் கண்டறிந்ததில்லை. அப்படிப்பட்டதா இக் காமநோய்! நான் வியப்படைகின்றேன்.




